**தேதி :** 30.06.2026 SC.No. : 128/2021 **PW :11** பாலமுருகன்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலம் மற்றும் அதற்கு மறுநாள் அ.சா.1–டம் தென்காசி போலீசார் பெற்ற புகார் வாக்குமூலம் இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த புகார் வாக்குமூலங்கள் தாக்கல் செய்யும் பட்சத்தில் எதிரிகளுக்கும், நடந்தததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பது துலங்கிவிடும் என்பதால் அது மறைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. காவல்துறையினர் பின்யோசனை செய்து, புகார் வாக்குமூலம் உற்பத்தி செய்யப்பட்டு அதன் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஆள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றி நிறைய குடியிருப்பு வீடுகளும், கடைகளும் உள்ளன என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து 50 அடி தூரத்தில் வடக்கு பக்கம் இந்து முன்னனி பிரமுகர் குமார்பாண்டியன் கொலை செய்யப்பட்ட இடம் உள்ளது என்றால் அருகாமையில் உள்ளது. அந்த இடத்தில்

ரம்ஜான், பக்ரீத், தீபாவளி, டிசம்பர் 6, குமார் பாண்டியன் நினைவு தினம், தேவர் ஜெயந்தி போன்ற தினங்களில் போலீஸ் பந்தோபஸ்து போடுவார்கள் என்றால் சரியல்ல. குமார்பாண்டியன் நினைவு தினத்தில் மட்டும் பந்தோபஸ்து போடுவார்கள். அந்த நினைவு தினமானது டிசம்பர் மாதம் தான் வரும். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தென்காசி காவல்நிலைய எந்த பீட்டில் வருகிறது என்றால் 1ம் நம்பர் பீட்டில் வருகிறது. பீட்டில் இருந்த போலீசார் தகவல் சொல்லவில்லை. சம்பவம் நடந்த இடத்தில் பக்கத்தில் நின்றவர்கள் சம்பவத்தை பார்த்ததாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு அருகில் வசிக்கும் நபர்களையும், அருகில் உள்ள கடைகளில் உள்ள நபர்களையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விசாரிப்பதற்கு ஒத்துழைக்காததினால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. அது குறித்து வழக்கு கோப்பில் துலங்காது.

நான் யாரையும் விசாரிக்கவில்லை என்பதினால் தான் வழக்கு கோப்பில் துலங்காது என்றால் சரியல்ல. அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தால் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த வித தொடர்பில்லை என்பது தெரிந்து விடும் என்பதினால் இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சிகளை விசாரிக்கும் போது அவர் பெயர், அவரின் தகப்பனார் பெயர், அவருடைய விலாசம் ஆகியவற்றை அவர்களிடம் கேட்டு பதிவு செய்து கொண்டேன் என்றால் சரிதான்.

அ.சா.2, அ.சா.3 முதல் புலன் விசாரணை அதிகாரியிடம்

அவருடைய பெயர், அவரின் தகப்பனார் பெயர், அவருடைய விலாசம் ஆகியவற்றை கூறியதைத் தான் என்னிடம் கூறினார்கள் என்றால் சரிதான். அ.சா.2 அவருடைய வாக்குமூலத்தில் அவருடைய பெயர் சதீஷ் என்று தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். அவரை நான் விசாரிக்கும்போது அவ்வாறு தான் கூறினார் என்றால் சரிதான்.

அ.சா.3 ன் அப்பா பெயர் ஜெயராம் என்று தான் என்னுடைய விசாரணையில் கூறினார் என்றாலும், அதனைத் தான் வாக்குமூலத்திலும் கூறியுள்ளார் என்றாலும் சரிதான். 2 வது சாட்சியின் பெயர் சுடர்மாணிக்கம் என்பது தான் சரியானது எனவும், சதீஷ் என தட்டச்சு பிழை ஏற்பட்டது என நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மெமோ குறித்து எனக்கு தெரியாது. அதைப்போல், அ.சா.3 மணிகண்டன், த/பெ.ஜெயராமன் என தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டது எனவும், மணிகண்டன், த/பெ. ஆதினம் என்பது தான் சரி எனவும் தாக்கல் செய்த மெமோ குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

அ.சா.2, அ.சா.3 ஐ நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2, அ.சா.3 திறந்த வெளியில் மது அருந்தி கொண்டிருக்கும்போது அவர்களை பிடித்த போது, அவர்கள் கொடுத்த தவறான பெயர், தந்தையின் பெயரை வைத்து இந்த வழக்கில் அவர்களை சாட்சியாக சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில், அ.சா.2 ன் பெயர் சதீஷ் என்றும், அ.சா.3 ன் தகப்பனார் பெயர் ஜெயராமன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் கையால் எழுதப்பட்டுள்ளது

என்றாலும், தட்டச்சு செய்யப்படவில்லை என்றாலும் சரிதான்.

அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் படிக்க கேட்டேன், சரியாக உள்ளது என்று கூறி தான் அ.சா.1 அதில் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். அ.சா.2 மற்றும் அ.சா.3, அ.சா.1 ன் நண்பர்கள் கிடையாது என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால் அவர்களுடைய பெயர் தவறாக சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையில் அ.சா.2, அ.சா.3 நண்பர்கள் என்றால் அவர்களுடைய பெயர், தகப்பனார் பெயர் சரியாக சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. அ.சா.1 என்னுடைய விசாரணையில், திருநாவுக்கரசர் மகன் பாபு என்பவர் என் அண்ணன் சுப்பிரமணியத்தை எங்கே என்று கேட்டார் என்று கூறியுள்ளாரா? என்றால் இல்லை.

எதிரி பாபு சுப்பையா மகன் என்றால் சரிதான். எதிரியை நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே தென்காசி காவல்நிலையத்தில் பாபு எதிரியாக இருந்தார் என்றால் அவர் மீது பல வழக்குகள் இருந்தது. புள்ளி விபரக்கணக்கிற்காக வேண்டி, எதிரி பாபுவை 3 நாட்களுக்கு முன்பே கைது செய்து, பின் யோசனை செய்து அடையாளம் தெரியாத நபர் தாக்கியதாக அ.சா.1 ஏற்கனவே கொடுத்த புகார் வாக்குமூலங்களை மறைத்து எதிரிகளை காட்டி ஒரு பொய்யான புகார் வாக்குமூலத்தை 03.11.2016 ல் பெற்றது போல் காண்பித்து அந்தபொய் புகாரின் அடிப்படையில் இந்த வழக்கின் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரம், சொன்ன

இடத்தில் வைத்து சொன்ன சாட்சிகள் முன்பு ஆஜர் 1வது எதிரியை கைது செய்ததாகவும் அப்போது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அதன் அடிப்படையில் சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

செங்கல்லில் பல வகைகள் உள்ளது என்றால் சரிதான். அது எந்த வகை செங்கல் என்று என்னுடைய விசாரணையில் சாட்சிகள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். செங்கல் எல்லா இடங்களிலும் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். நான் கைப்பற்றப்பட்ட பொருளுக்கும், இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் செங்கல் வேறு எங்கோ பெற்று தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாம்சன் துவக்கப்பள்ளியின் வடபுறச்சுவர் 100 அடி இருக்கும் என்றால் சரிதான். செங்கல் 100 அடியில் எந்த இடத்தில் குறிப்பாக கைப்பற்றப்பட்டது என்று அத்தாட்சியில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.3 சம்பவம் நடைபெற்றதாக கூறப்படும் நேரத்திற்கு பின்பு இருவரும் சேர்ந்து ஆழ்வார்க்குறிச்சியிலுள்ள எந்த கோவிலில் சென்றதாக என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் அது குறித்து கூறவில்லை.

அ.சா.2 சிவசைலம் சைலப்பர் கோவிலுக்கும், அ.சா.3 அக்னிதீர்த்தகரை கோவிலுக்கும் சென்றதாக என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.3 கோவிலுக்கு ஒரே பைக்கில் சென்றதாகவோ, தனித்தனி பைக்குகளில் சென்றதாகவோ துலங்காது என்றால் சரிதான்.

அ.சா.1 ஐ, சம்பவயிடத்திலிருந்து போக்கு ஆட்டோவில் அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் அ.சா.1 ஐ பைக்கில் தென்காசி தங்கபாண்டியன் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான்.

அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் சம்பவத்திற்கு பின்பு அ.சா.1–ருடன் மருத்துவமனைக்கு சென்றதாக என்னுடைய விசாரணையில் துலங்கவில்லை. அ.சா.4 குமார் என்பவருக்கு யார் போன் மூலம் தகவல் கொடுத்தார்கள் என்று என்னுடைய விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரிதான். மருத்துவர் சமீமா என்னுடைய விசாரணையில் காயம்பட்டவர் அடையாளம் தெரியாத 4 நபர்கள் தாக்கியதாக கூறியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான்.

முதல்விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரி அந்தோணி என்பவரை இந்த வழக்கில் சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர் இறந்துள்ளார். குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்தபோது, அவர் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அவரை சாட்சி பட்டியலில் சேர்க்காததற்கு தனிப்பட்ட காரணம் இல்லை. அவர் புலன் விசாரணை எதுவும் செய்யவில்லை என்றாலும், அவர் சம்பவயிடத்தை பார்வையிடவில்லை என்றாலும், அவர் பெயரில் ஆவணங்கள் தயாரித்தேன் என்றாலும் சரியல்ல. அதனால் தான் அவரை சாட்சி பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.1 க்கும், அவருடைய அண்ணன் சுப்பிரமணியத்திற்கோ,

எதிரி பாபுவையோ இந்த வழக்கில் சேர்ப்பதற்கு முன்பு தெரியாது என்றால் சரியல்ல. எதிரி பாபு, அ.சா.1ன் அண்ணன் சுப்பிரமணியத்திற்கு தொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக கட்டுக்கதை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தை எந்த நாள், எந்த நேரத்தில் பார்வையிட்டேன் என்று வழக்குகோப்பில் துலங்காது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், ஆவணங்கள் மற்றும் சான்று பொருள் பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. நான் ஒருதலைபட்சமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.02 11:11:52 +0530